# 02. காணி உப பிரிப்பு மற்றும் காணித் துண்டுகளை ஒருங்கிணைப்பதற்கான அனுமதி

டிஜிரல்மயப்படுத்தல் தரவுகளை பயன்படுத்தல்.

இலத்திரனியல் செய்திகள் /பரிவர்த்தனைகள் (SMS /Whats App/e-mail)

சபையின் இணையத் தளம் ஊடாக அல்லது முன்னலுவலகத்தில் விண்ணப்பம் பெற்றுக்கொண்டு, அறிவுறுத்தலுக்கமைய பூர்த்தி செய்து முன் அலுவலகத்திடம் ஒப்படைத்தல்.

பொறுப்பு : விண்ணப்பத்தாரி

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை பொறுப்பேற்று முன்கூட்டிய கட்டணத்தை அறவிட்டுக் கொள்ளுதல், பற்றுச்சீட்டு மற்றும் தொடர்பு இலக்கத்தை வழங்குதல், விண்ணப்படிவத்தை பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் வெளிக்களப் பரிசோதனைக்கு வரும் திகதியை விண்ணப்பதாரிக்கு அனுப்புதல்.

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

விண்ணப்பப்படிவத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல்.

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

வெளிக்களப் பரிசோதனைக்கு வரும் திகதியை விண்ணப்பதாரிக்கு உறுதிப்படுத்துதல்.

பொறுப்பு: தொழிநுட்ப உத்தியோகத்தர்

வெளிக்களப் பரிசோதனையை மேற்கொண்டு, அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரை அறிக்கை அடங்கிய கோவையை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அனுப்புதல்.

பொறுப்பு: தொழிநுட்ப உத்தியோகத்தர்

விண்ணப்பம் விதந்துரைக்கப் பட்டதா?

இல்லை

பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைப்பாடுகளை அறிவித்தல்.

பொறுப்பு: விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டதாக அறிவித்தல்

பொறுப்பு : விண்ணப்பத்தாரி

ஆம்

அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பில் தீர்மானம் எடுத்தல்.

பொறுப்பு : திட்டமிடல் குழு

அனுமதிக் கப்பட்டதா?

ஆம்

அபிவிருத்தி அனுமதிப்பத்தரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தை முன் அலுவலகத்தில் ஒப்படைத்தல்.

பொறுப்பு : விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

அனுமதிக்கப்பட்ட ஆவணங்களை விண்ணப்பதாரிக்கு ஒப்படைத்தல்

பொறுப்பு : முன் அலுவலக உத்தியோகத்தர்

இல்லை

அமைச்சருக்கு முறைப்பாடு செய்தல்.

பொறுப்பு : விண்ணப்பத்தாரி

செயலாற்றுகை சுட்டி



# 02. காணி உப பிரிப்பு மற்றும் காணித் துண்டுகளை ஒருங்கிணைப்பதற்கான அனுமதி

## 1. அறிமுகம்.

நகரமயமாகி வருகின்ற மற்றும் எதிர்காலத்தில் நகரமயமாவதற்கு வாய்ப்புள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரேரிக்கப்படுகின்ற பிரதேசத்திற்குள் உள்ள ஏதேனும் ஒரு காணியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் உப பகுதிகளாகப் பிரிக்கும்போது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காணித்துண்டுகளை ஒருங்கிணைக்கும்போது, சுகாதாரத்திற்கு மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைப்பதற்குத் தேவையான ஒழுங்கமைக்கும் அதிகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரப் பிரதேசத்திற்குள், நகர அபிவிருத்திப் பிரிவு என்ற ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பூகோளரீதியான பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து காணி துண்டு பிரிப்புகளும், காணி ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுக்காகவும் தயாரிக்கப்படுகின்ற அளவையியலாளர் திட்ட வரைபட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அனுமதிக்கு உட்படுதல் வேண்டும்.

அனைத்து மாநகரசபை அதிகாரப் பிரதேசங்களும், நகர சபை அதிகாரப் பிரதேசங்களும், நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சில பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்கள் முழுமையாகவும், இன்னும் சில பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களில் குறிப்பிட்ட பகுதிகளும் நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் பல பிரதேச சபைகள் இதுவரை நகர அபிவிருத்திப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படவில்லை.

## 2. சட்டரீதியான அதிகாரம்

1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட இலக்கம் 2235/54 மற்றும் 2021.07.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்.

## 3. காணி துண்டு பிரித்தல் அல்லது ஒருங்கிணைக்கும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் தன்மை.

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி ஆணையச் சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் அமைச்சரால் ''நகர்ப்புற அபிவிருத்திப் பகுதி'' என்று அறிவிக்கப்பட்ட ஒரு பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்ற, எந்தவொரு விதத்திலுமான அபிவிருத்தி செயற்பாடுகள் அல்லது காணிகளைத் துண்டு பிரித்தல் போன்ற செயற்பாடுகளின்போது திட்டமிடல் குழுவின் சிபாரிசின் கீழ் அதிகாரம்பெற்ற ஒரு அளவையியலாளரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தின் முகப்பில், தலைவர் மற்றும் செயலாளர்/தலைவர் அல்லது செயலாளரால் (நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள விதத்தில்) கையொப்பமிடப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரமாக இருத்தல்.

**குறிப்பு:** அபிவிருத்திக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நேரத்தில் இணக்க சான்றிதழ் பெறப்பட வேண்டிய நிபந்தனைகள் சேர்க்கப்பட்டிருப்பின் வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட அல்லது துண்டு பிரிப்புச் செய்யப்பட்ட காணியைப் பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கு முன்னர் இணக்க சான்றிதழ் பெறப்பட வேண்டும். (இதற்கான நடைமுறை பிறிதாக வழங்கப்பட்டுள்ளது.)

**4. தகைமைகள்**

(அ) பிரதேச சபையின் எல்லைக்குள், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் அமைச்சரால் நகர்ப்புற அபிவிருத்திப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள காணியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் சொத்தின் சட்ட உரிமையாளராக இருக்க வேண்டும். அல்லது உரிமையாளரிடமிருந்து அட்டோர்னி தத்துவத்தைப் பெற்ற ஒரு நபராக இருத்தல் வேண்டும்.

(இ) பிரதேச சபையினால் வரிப்பணம் அறவிடப்படுகின்ற அதிகாரப் பிரதேசத்திற்குள் காணி இருக்குமாயின், உரிய சொத்தின் உரிமையானது, சட்டரீதியான உரிமையைக் கொண்ட நபரது பெயர் மதிப்பீட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். (மதிப்பீட்டு பதிவேட்டில் பெயரை உள்ளடக்குவதற்கு சொத்தின் உரிமையை பதிவு செய்வதற்கான நடைமுறைகளைப் பார்க்கவும்)

(இ) காணியின் சுவட்டு வரைபடம், 2021ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார (திட்டங்கள் மற்றும் கட்டிடங்கள்) கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய வரையப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**5. கட்டணங்கள்**

(அ) விண்ணப்பப்பத்திரக் கட்டணங்கள் சபையினால் தீரமானிக்கப்படும் விதத்தில் அமைதல் வேண்டும்.

**குறிப்பு**: 1. சபையின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு இந்தக் கட்டணம் செலுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

2. உள்ளூராட்சி நிறுவனங்களால் இந்த கட்டணமானது முத்திரைச் செலவைத் தீர்த்துக் கொள்வதற்காக மட்டும் வரையறுக்கப்படும் விதத்தில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) காணி உப பிரிப்பு அல்லது ஒருங்கிணைப்புக்கான விண்ணப்பப்படிவம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் (முன்கூட்டிய கட்டணம்) 2021 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளது 2ஆம் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விதத்தில் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: 1. நகர அபிவிருத்தி பிரதேசத்திற்கு ஏற்புடையதாக இந்த கட்டணம் மாற்றம் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கான அதிகாரம் நகர்சார் அபிவிருத்தி விடய பொறுப்பு அமைச்சரிடம் உள்ளபடியால், அவ்வப்போது மேற்கொள்கின்ற திருத்தங்கள் தொடர்பாக கவனமாக இருத்தல் முக்கியமாகும்.

2. இந்த கட்டண சூத்திரத்தினை பொதுமக்கள் பரிசீலனை செய்வதற்கு முடியுமான வகையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 6. சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்

விண்ணப்பதாரி செய் விரும்புகின்ற அபிவிருத்தி வேலையின் இயல்பின் அடிப்படையில் உரித்தாகும் விண்ணப்பப்படிவத்தை, 2021 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளின் 1ஆம் உப அட்டவணையின் 'ஆ' படிவம் - இணைப்பு I, 'ஆ' படிவம் - இணைப்பு II, 'ஆ' படிவம் - இணைப்பு III, 'ஆ' படிவம் - இணைப்பு IV, 'ஆ' படிவம் - இணைப்பு V, 'ஆ' படிவம் - இணைப்பு VI, ஆகிய ஆவணங்கள் மற்றும் 3ஆம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய நபரால் வழங்கப்பட்ட சான்றிதழுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அபிவிருத்தியின் இயல்பின் அடிப்படையில் விண்ணப்பப்பத்திரத்தில் இணைத்து வைக்கப்படவேண்டிய ஆவணங்கள் தொடர்பான தகவல்கள் உரிய விண்ணப்பப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளன.

காணி உப பிரிப்பு அல்லது ஒருங்கிணைப்பு ஒன்றினை அனுமதித்துக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்பத்திரங்களை ஒன்லைன் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையில் ஏற்பாடுகள் உண்டு. உள்ளூராட்சி நிறுவனமும் அதே விதத்தில் செயற்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் முக்கியமானதாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்குப் புறம்பாக கீழே காட்டப்பட்டள்ள ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. காணி அமைந்துள்ள இடத்திற்கு இலகுவில் பிரவேசிக்கக்கூடியதாக சுற்றியுள்ள பகுதியும் காட்டப்படும் விதத்தில் வரையப்பட்ட அண்ணளவான வரைபடம்.
2. நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட காணி உறுதியின் போட்டோ பிரதி மூன்று.

**குறிப்பு:** 1. விண்ணப்பதாரியின் பெயர் உரிய சொத்தின் உரிமையாளர் என வரிப்பண ஆவணத்தில் உள்ளடக்கப்படவில்லையெனின் நிருமாண அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் வரிப்பண பதிவேட்டில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது நிருமாணத்திற்குரிய சுவட்டு வரைபடம் வரையப்பட்ட அளவையியலாளரை இணைத்துக் கொள்வதன் ஊடாக தவறுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

7. **விண்ணப்பிக்கும் நடைமுறை**

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|
| விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுதல். (முன் அலுவலகத்தில் அல்லது சபையின் இணையத்தளத்தில்) | | விண்ணப்பதாரி |
| தகைமைபெற்ற நபரால் உறுதிப்படுத்தப்பட்டு சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்றல், முன்கூட்டிய கட்டணத்தை அறவிடுதல், பற்றுச்சீட்டை வழங்குதல், விண்ணப்பப்பத்திரத்தை பொறுப்பேற்றதாகவும் வெளிக்களப் பரிசோதனைக்கு வரும் திகதியை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல். | விண்ணப்பத்தைப் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்திலேயே | முன் அலுவலக உத்தியோகத்தர் |

**குறிப்பு:** தொழிநுட்ப உத்தியோகத்தரின் மாதாந்த முன்னிகழ்ச்சித்திட்டத்திற்கமைய இடப் பரிசோதனைக்காக திகதியை ஒதுக்கிக் கொள்வதற்கும் அதற்கு உதவுவதை இலகுபடுத்தும்பொருட்டு அவர்களது மாதாந்த முன்னிகழ்ச்சித்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட பிரதி வீதம் முன்கூட்டியே முன் அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடிய விதத்தில் நடைமுறையொன்றைப் பேணிச் செல்லுதல் வேண்டும்.

**8. விண்ணப்பப்படிவத்தை பதிவு செய்ததன் பின்னரான நடைமுறை**

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|
| விண்ணப்பத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்புதல். | விண்ணப்பப்பத்திரத்தை பொறுப்பேற்ற சந்தர்ப்பத்திலேயே | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| வேளிக்களப் பரிசோதனைக்கு வரும் திகதியை உறுதிப்படுத்தும் அறிவித்தலை விண்ணப்பதாரிக்கு சமர்ப்பித்தல். | விண்ணப்பப்பத்திரம் தம்மிடம் கிடைத்தவுடன். | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| வெளிக்கள பரிசோதனை | விதிக்கப்பட்ட திகதியிலேயே | |
| விண்ணப்பம் தொடர்பில் தமது அவதானிப்பு மற்றும் விதப்புரைகள் அடங்கிய கோவையை திட்டமிடல் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல். | வெளிக்களப் பரிசோதனையை நடாத்திய திகதியிலேயே. | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| தொழிநுட்ப உத்தியோகத்தரது விதப்புரை அடங்கிய விண்ணப்பத்தை கவனத்திற்கொண்டு அனுமதித்தல். | குறிக்கப்பட்ட திட்டமிடல் குழு திகதியிலேயே | திட்டமிடல் குழு |

| | | |
|---|---|---|
| அளவையியலாளர் வரைபடத்தின் முகப்பு, அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவுள்ள குறிப்பிற்கும் அனுமதிப்பத்திரத்திற்கும், அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளுதல். | திட்டமிடல் குழு கூட்டப்பட்ட திகதி தொடக்கம் இரண்டு நாட்களுக்குள் | விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |
| கையொப்பமிட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவையியலாளரின் திட்ட வரைபடத்தினை முன் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் விண்ணப்பதாரியை அறிவுறுத்துதல். | திட்டமிடல் குழு கூட்டப்பட்ட திகதி தொடக்கம் இரண்டு நாட்களுக்குள் | விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |
| அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவையியலாளர் திட்ட வரைபடத்தை விண்ணப்பதாரிக்கு அனுப்புதல். | விண்ணப்பதாரி வந்திருந்தால், அந்தச் சந்தர்ப்பத்தில் அல்லது தபாலில் மற்றும் இலத்திரனியல் ஆவணத்தின் வடிவில். | முன் அலுவலக உத்தியோகத்தர் |